**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**எம்.சி.ஓ.பி எண்.28/2021**

**ம.சா. – 1–திருமதி.வனிதா பாஸ்டின்**

**நாள். 20.06.2025**

**ம.சா. 1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் உள்ள விபரங்கள் அனைத்தும் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கை மற்றும் பிரேத பரிசோதனை அறிக்கையை போலீசாரிடமிருந்து தான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமான மற்ற ஆவணங்களான மோட்டார் வாகன ஆய்வறிக்கை, மாதிரி வரைபடம் மற்றும் குற்ற இறுதி அறிக்கை ஆகியவற்றை பெற்றோனா என்றால் இல்லை. எனது கணவரின் உடல் கூராய்வின் இறுதி அறிக்கையை விசார பரிசோதைக்கு அனுப்பியிருந்த விபரம் தெரியுமா என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவர் குடித்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்பதால் தான் மேற்படி அறிக்கையை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். வழக்கு விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியது என்றால் சரிதான். எனது கணவரின் இறப்பிற்கு காரணம் விபத்தின் போது பின் தலையில் ஏற்பட்ட காயம் தான் என்றால் சரிதான். என் கணவர் விபத்தின் போது தலை கவசம் அணித்திருத்தால் இறப்பை தவிர்திருக்கலாம் என்றால் சரியல்ல. என் கணவரின் ஓட்டுனர் உரிமம், மற்றும் விபத்தின் போது என் கணவர் ஓட்டிச்சென்ற வாகனத்தில் காப்பீடு ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவர் தான் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும், குடிபோதையில் ஓட்டிச்சென்று 1 ஆம் எதிர்மனுதாரரின் லாரியின் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு சம்பந்தமாக போலீசார் விசாரித்து புலன் விசாரணையின் பேரில்

வழக்கை குடிபோதையில் வாகனத்தை ஓட்டி வந்து எதிரே வந்த லாரியின் மீது மோதி என் கணவர் விபத்திற்கு காரணமானவர் என்று மேற்படி வழக்கு விபத்து(Mistake of Fact) முடிக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது கணவரின் வருமானத்திற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கு விபத்திற்கு என் கணவர் தான் காரணம் என்றும், எங்களுக்கு 2 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனம் இழப்பீடு வழங்க வேண்டி அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

G SARAN

Digitally signed by G SARAN
Date: 2025.06.20 16:01:10 +0530

Additional District Judge(FAC),

Dindigul.